வெற்றிடங்கள்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை

(வீடமைப்பு, நிர்மாண மற்றும் நீர்வழங்கல் அமைச்சு)

விசாரணை அதிகாரி (பணி அடிப்படையில்)
தகைமைகள் மற்றும் அனுபவம்:

அரசாங்கத் துறை நிறுவனம் ஒன்றில் அல்லது அரசாங்க திணைக்களத்தில், குற்றவியல் விசாரணைகள், நீதிமன்ற வழக்குகள், தொழிற்துறை தகராறுகள் போன்ற உள்நாட்டு திணைக்கள ஆரம்ப விசாரணைகள், ஒழுக்காற்று விசாரணைகள் மற்றும் தொடர்பான பணிகளை நடாத்துவதில் 08 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவம். (அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள்/அரசாங்கத் துறை நிறுவனங்களின் நிறைவேற்று / சிரேஷ்ட மட்டத்தில் அல்லது மேற்பார்வைப் பதவியில் ஓய்வுபெற்ற அதிகாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

ஆட்சேர்ப்பு அளவுகோல்:

நேர்முகத் தேர்வு

கொடுப்பனவு முறை:

பின்வரும் வகையில் பணி அடிப்படையில்

சாட்சிகளைப் பதிவு செய்தல்:

ஒவ்வொரு சாட்சிக்கும் ரூ. 3,500.00 வீதம்

இடைக்கால அறிக்கைகள்:

ஒரு இடைக்கால அறிக்கைக்கு ரூ. 5,000.00 வீதம்

இறுதி அறிக்கை: ரூ. 10,000.00

- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ் வாதாரக் கொடுப்பனவுகளுக்கு உரித்துண்டு.
- கொழும்பு -02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, தலைமை அலுவலக வளாகத்திற்கு வெளியே நடாத்தப்படும் ஆரம்ப விசாரணை களுக்குச் சமுகமளிக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப் படும்.

முழுமையான சுயவிபரக் குறிப்புடன் கூடிய விண்ணப்பங்களை, உரிய சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளுடன், கொழும்பு -02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பொது முகாமையாளர் (மனித வள அபிவிருத்தி மற்றும் நிர்வாகம்) அவர்களுக்கு 2026.11.07ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்ய வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். உரிய சான்றிதழ்கள் இன்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தலைவர்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை
சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு -02